


FREE E - BOOKS , www.thamizham.net.,

# எம். ஜி. ஆர் கடவுளானார்!

நல்ல வேளை காந்தி, பெரியார், அண்ணா போன்றவர்களைக் கடவுளாக்கவும் அவர்களுக்குக் கோயில் கட்டவும் யாரும் துணியவில்லை.

தமிழ் மக்களின் தலைமை வழிபாட்டுத் தொழு நோயை வளர்த்து சொரிய வைக்கத் தெரிந்த ஒரு கூட்டம்–வாழ்ந்தபோதே எம். ஜி. ஆரால் சொத்து சேர்த்த ஒரு கூட்டம் இறந்த எம். ஜி. ஆரையும் வைத்துப் பிழைப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளது.

*பெரியார் மாவட்டத்தில் ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் எம். ஜி. ஆர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டு விழா நடந்திருக்கிறது. 250 எம். ஜி. ஆர் பக்தர்கள் காவிரியிலிருது குடங்களில் தீர்த்தம எடுத்துக்கொண்டு கோவில் கட்டப்படும் இடத்திறகு ஊர் வலம் வந்தனர். 7 பேர்கள் தலை முடி காணிக்கை செலுத்தினர். 3 பேர்கள் இளநீர் காவடி எடுத்துக் வந்தனர். வேல் எடுத்து வந்த எம். ஜி. ஆரின் பகதர்களுக்கு பொதுமக்கள் வழி நெடுகிலும் தண்ணீர் ஊற்றி பூஜை செய்து விபூதி பெற்றுக் கொண்டு பயபக்தியுடன் வழி பட்டனர். "இதய தெய்வம் திருக் கோவில் தீர்த்தம்" என்று எழுதப்பட்ட பேனரைப் பிடித்துக் கொண்டு, "சத்துணவு தந்த சரித்திர நாயகன் சரணம் எம். ஜி. ஆர்", "பொன்மனச் செம்மல் சரணம் எம். ஜி. ஆர்". "பரங்கிமலை பாரி வள்ளல் சரணம் எம். ஜி. ஆர்", ஆகிய கோஷங்களை எழுப்பினார்கள் (செய்தி–மாலை மலர் 9-1-88)*

இதே போல சென்னை அருகே 20 ஏக்கர் நிலத்தில் எம். ஜி. ஆருக்குக் கோயில் கட்டப் போவதாகவும், அது கன்னியாகுமரி விவேகானந்தர் தியான மண்டபம் போல ஒரு மண்டபத்துடனும், நீச்சல் குளம் தங்கும் விடுதிகள் போன்ற சுற்றுலா கவர்ச்சியுடனும் அமைக்கப் படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எம். ஜி. ஆர் கோவில்கள் இனி நாடெங்கும் கட்டப்படலாம். முருகனின் இன்னொரு அவதாரமாகவும் எம். ஜி. ஆர் காட்டப்படலாம் இவற்றை ஏற்பதற்கும் நம்புவதற்கும், வழிபடுவதற்கும் ஆட்களா இல்லை? அரசியலில் சம்பாதித்து ஒய்ந்தவர்கள் இங்கு மடாதிபதிகளாயும், பூசாரிகளாயும் மாறுவேடம் போடக் கூடும்.

கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி என்று சொன்ன பெரியாரின் வழி வந்தவராகத் தன்னைச் சொல்லிக்கொண்ட எம். ஜி. ஆரின் திருக்கோவிலை, நல்ல வேளை பார்த்து ரத்தக் கண்ணீர் வடிக்க அண்ணாவும், பெரியாரும் உயிரோடில்லை.

—எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

இன்று கலை, இலக்கியங்கள் எப்படி?

## சுந்தர ராமசாமி :

*மந்தங்களும், மழுங்கல்களும், சுரணை கெட்டதனங்களும் எங்கும் நீக்கமற நிறைந்து விட்டன. மிகக் கேவலமான ஒரு ஆட்சியின் ஆபாசக்கூத்துக்களை ஒருக்கால் உலகச் சரித்திரத்திலிருந்துகூட உதாரணங்கள் கூற முடியாத கேவலத்தை சகித்துக் கொண்டு வருகிறோம்.*

ஆனால் கலாச்சாரச் சீரழிவின் குறியீடாக யாரும் இதைக் காண்பதில்லை. வணிகப் பத்திரிகைகளும், வணிக அரசியலும், வணிக மதங்களும் இணைந்து உருவாக்கிய சீரழிவின் வெற்றி இது. சீரழிந்த கலாச்சாரங்கள் உருவாக்கும் லகரிகள் மூளை நரம்புகளில் கிளுகிளுப்பைத் தந்து கொண்டிருக்கின்றன, பிழைப்பின் கொடிய கோலங்கள் அளிக்கும் வெறுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள இந்த லகரியை உணவு போல் அள்ளி அள்ளித் திணித்துக் கொள்ள அலைகிறது கூட்டம்.

இன்று தமிழில் கலை, இலக்கியம் என்று பொதுவாகச்சொல்ல முடிவதில்லை. நல்ல கலை, நல்ல இலக்கியம் என்று சேர்த்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. இது போன்ற ஒரு அடைமொழிக்குப்பல இந்திய மொழிகளில் இன்று வரையிலும் அவசியம் ஏற்படவில்லை. அங்கு கலை என்றாலே தரமான கலைதான். இலக்கியம் என்றாலே மேலான இலக்கியம் தான். இவை தாம் அங்கு பொருட்படுத்திப் பேசப்படுகின்றன. இவை முன் வைக்கும் மதிப்பீடுகளே ஆராயப்படுகின்றன, இவை உருவாக்கும் அழகுகளே கவனிக்கப்படுகின்றன. கலை, இலக்கிய முயற்சிகளை ஊக்குவிக்க அளிக்கப்படும் பட்டங்களும் சரி, பரிசுகளும் சரி, பெரும்பாலும் இவ்வட்டங்களைச் சேர்ந்த ஆக்கங்களுக்கே அளிக்கபடுகின்றன. கலை, இலக்கியம் என்ற பெயரில் உருவாக்கப்படும் ஜோடனைகள் - மனித பலவீனங்களைச் சுரண்டும் ஜோடனைகள் - இங்கு பெரும்பாலும் சமூக அங்கீகாரம் பெறுவதில்லை. நிறுவனங்கள் அளிக்கும் அந்தஸ்துகள் அவற்றுக்குப் பெரும்பாலும் போய்ச் சேருவதும் இல்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆர். கே. நாராயண் :

# தமிழில் எழுதமாட்டேன்!

புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் ஆர். கே. நாராயண் சென்னையில் பிறந்து வளர்ந்தவர். பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் ஆங்கிலத்தில் மட்டும் தோல்வியுற்றவர், ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் சோர்வைத் தந்தன; கேள்வி கேட்பவர் களுக்கும் கற்பனா சக்தியும் இல்லை என்பதே இவர் தோற்ற தற்குக் காரணமாம், 81 வயதான அவரிடம் சில கேள்விகள்:

**எழுதும் உணர்வுத் தூண்டுதலுக்கும் வயதிற்கும் தொடர்புண்டா?**

நிச்சயமாக, முதுமையில், எழுதவேண்டும் என்ற தூண்டுதல் குறைகிறது.

**ஒரு நாளின் எந்த நேரத்தில் எழுதுகிறீர்கள்?**

விடியற்காலையில் புத்துணர்வுடன் எழுந்து எழுத வேண்டும் என்ற கொள்கையில் எனக்கு நம்பிக்கை யில்லை. நான் மதிய நேரத்தில் எழுதி இரவு நேரத்தில் எழுதியதைச் சரிபார்ப்பேன்.

**நீங்கள் எப்போதாவது தமிழில் எழுதிய துண்டா?**

இல்லை, என்றுமே இல்லை. என்னால் மிகவும் சிரமப் பட்டே தமிழில் எழுதப்படிக்கமுடியும். ஆனால் கம்பனின் ராமாயணம் எழுதப்பட்ட அந்த இலக்கியத் தமிழில் எனக்கு ஆர்வமுண்டு.

**நீங்கள் தமிழில் சிந்திப்பதுண்டா?**

ஒரு மொழியில் தான் சிந்திக்க முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.

**உங்கள் பெண் பாத்திரங்கள் வலுவாக அமைக் கப்படுவதில்லையே ஏன்?**

பெண்கள் சுவையற்றவர்களாக இருப்பதாக உணர் கிறேன்.

**மறுபிறவியில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?**

(சிரிப்புடன்) அடுத்த ஜென்மத்தில் நான் ஒரு தமிழ் எழுத்தாளனாக இருக்கக்கூடும்; ஒரு நான்காந்தரமான தமிழ் எழுத்தாளன்.

**ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சனை பற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துண்டா?**

இல்லை. எல்லோரும், எல்லோரையும் சுட்டுக்கொண்டு இருப்பதாகத் தோன்றுகிறது.

நன்றி : சன்டே

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பழைய கதைகள்

பழைய கதைகளை மீண்டும் வெளியிடுகிற வேலையைத் தொடங்கி வைத்தது கல்கி இதழ் தான். கல்கியின் சிவகாமியின் சபதம் இரண்டாம் முறை வெளியிடப்பட்ட பின் பொன்னியின் செல்வன் வெளிவருகிறது.

கல்கியைத் தொடர்ந்து பிற இதழ்களும் இம்முறையைக் கடைப்பிடிக்கின்றன. குமுதத்தில் இப்போது சாண்டில்யனின் மன்னன் மகள்; மின்மினி வார இதழில் சாண்டில்யனின் மூங்கில் கோட்டை - சாவியில் தேவன் எழுதிய துப்பறியும் சாம்பு-இதயம் பேசுகிறதில் மணியனின் காதலித்தால் போதுமா?

சாண்டில்யன், கல்கி, தேவன், போன்றவர்கள் இறந்து போனவர்கள். இவர்களுடைய புத்தகங்கள் நூலகங்களிலும் விலைக்கும் கிடைக்கின்றன. யார் வேண்டுமானாலும் படிக்கலாம். மீண்டும் இவற்றை வார இதழ்கள் வெளியிட வேண்டிய அவசியமில்லை. காலம் கருதி அவர்களது சிறுகதையையோ, கட்டுரையையோ மறுபிரசுரம் செய்யலாம். அதற்காக வருடக்கணக்கில் தொடராக ஏன் வெளியிட வேண்டும்?

மணியன் உயிருடன் இருக்கிறார். அவர் 1962-ல் எழுதிய கதையை தனது சொந்த பத்திரிகையில் மீண்டும் போட்டுக்கொள்கிறார். யாராவது கேட்டார்களா? எழுதுவதானால் புதிதாக எழுத வேண்டியதுதானே!

சிறந்த படைப்பாளர்களுக்கு ஒன்றும் பஞ்சம் வந்து விடவில்லையே! எத்தனையோ ஆற்றலும், திறமையும் குவிந்துள்ள படைப்பாளிகள் களம் கிடைக்காது தேங்கிக் கிடக்கிறார்களே! புத்தம் புதிய இலக்கிய முயற்சிகளுக்கு வழி வகுக்கலாமே!

செய்யலாம் தான்! ஆனால் பழைய கதைகளை இடநிரப்பிகளாக பயன்படுத்தி பிசினஸ் பண்ணுவதே மசாலா பத்திரிகைகளுக்கு எளிதாக இருக்கும்போது ஏன் வீண் விஷப் பரிட்சை? இது பிசினஸ்! தொண்டு என்று உங்களுக்குச் சொன்னது யார்?

–மிஸ்டர் ஒய்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அயன்ஸ்டைன் எனும் மனிதர்

அய்ன்ஸ்டைன் யார்? ஓ...அவர் மாபெரும் விஞ்ஞானி. பைப் பிடித்துக் கொண்டு 'போஸ்' கொடுப்பார். க்விஸ் மாஸ்டர்களுக்கு நிரந்தர சகா, கலைந்த தலையுடனும், பைப்புடனும் ஆழ்ந்த சோகத்துடனும் உலகை நோக்கும் கிழவர். அவர் ஃபிடில் கூட அழகாக வாசிப்பாராம். ஞாபக மறதிப் பேராசிரியர். ஷவரத்திற்கும் குளிப்பதற்கும் ஒரே சோப்பை உபயோகிப்பாராம். நோபல் பரிசுக்கான செக்கை மறந்து போய் ஏதோ தடிமனான புத்தகத்தில் வைத்து விட்டாராம்.

இவை மேம் போக்காக நாம் அறியும் அய்ன்ஸ்டைன். அய்ன்ஸ்டைன் என்ற விஞ்ஞானியைத் தெரிந்து கொள்வதற்கு நாம் சிக்கலான கணித பாஷைகளில் பாண்டித்யம் பெற வேணும். ஆனால் அய்ன்ஸ்டைன் எனும் மனுஷரை நிஜமாக அறிய அவர் எழுதிய கடிதங்கள் நமக்கு உதவுகின்றன. பெரிய விஞ்ஞானிக்கு எழுதிய அதே கையால் சின்னக் குழந்தைக்கும் பதில் எழுதுகிறார். வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி 19 வயதான ஒரு ரட்கர்ஸ் பல்கலைக் கழக மாணவனுக்கு; உளவியல் மாணவனுக்குக் கலப்புத் திருமணம் பற்றி; விஞ்ஞானிகள் கடவுளை வழிபடுகின்றனரா என்று 6-வது படிக்கும் குழந்தை கேட்கிறாள். அதற்குப் பதில்...

இவை எளிமையுடனும், சுவாரஸ்யத்துடனும் இருப்பது மட்டுமல்லாமல் ஆழ்ந்த மனித நேயத்துடனும் இருக்கின்றன. தவிர, ஆங்காங்கு மெலிதாக இழையோடும் நகைச்சுவை... 1898-இல் சூரிஷ்ஹில் மாணவனாக இருந்தபோது தன் தங்கை மஜாவிற்கு எழுதிய கடிதம் :

"அன்புள்ள தங்கைக்கு,

என் பெற்றோரின் பணக்கஷ்டம் என்னைக் கலங்க வைக்கிறது வளர்ந்தவனான நான் இதைப் பார்த்துக்கொண்டு ஒரு சிறிய உதவியும் செய்யாமல் இருப்பது பெரும் மனக்கிலேசத்தை உண்டு பண்ணுகிறது. குடும்பத்திற்கு நான் ஒரு சுமையாக இருக்கின்றேனே தவிர வேறில்லை. நான் பிறவாமல் இருந்திருந்தாலே நன்றாக இருந்திருக்கும். ஆனால் எனக்குச் சிறிது ஆறுதலைத் தருவது, வருஷக்கணக்காக வேறு எந்தக் கேளிக்கைகளிலும் மனம் செலுத்தாமல் என் பாடங்களிலேயே மூழ்கியிருப்பது ஒன்று தான்."

—ரமேஷ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

மருத்துவம்:

# மாரடைப்புப் பெண்களுக்குக் குறைவாக வருவதேன்?

மாரடைப்பால் இந்த மனிதர் இவ்வளவு இளம் வயதில் இறந்துவிட்டார் என்று சொல்வதுபோல இந்தப் பெண் இளமையில் இறந்துவிட்டாள் என்று சொல்லிக் கேட்டிருக்கிறீர்களா?

ஆண்களுக்கு மாரடைப்பு வருவதுபோல பெண்களுக்கு ஏன் வருவதில்லை என்ற கேள்விக்கு இன்னும் மருத்துவ ஆய்வாளர்கள் சரியான பதில் தரமுடியாமல் திணறி வருகிறார்கள்.

39 வயதுக்குமேல் ஆண்களைக் கொல்லும் முதல் நோய் மாரடைப்புதான். ஆனால் பெண்களைப் பொறுத்தவரை 66 வயதிற்கு மேல்தான் மரணத்திற்கு மாரடைப்பு முதல் தரமான காரணமாகிறது. மாதவிலக்கு நின்ற பின்னர்தான் பெண்களுக்கு இதய நோய்கள் வரும் சாத்தியம் ஏற்படுவதாகவும் தெரிகிறது. மாதவிலக்கு வரும் பெண்களுக்குச் சுரக்கும் சில சுரப்பு நீர்கள் மாரடைப்பைத் தடை செய்யக் கூடும். மேலும் பெண்களுக்கு மாரடைப்பு வருவதற்கு முன் நீண்ட நேரம் வலியும் சிரமமும் ஏற்படும். எனவே மாரடைப்பைத் தவிர்க்க அவகாசம் கிடைக்கிறது. ஆனால் ஆண்களுக்கு பல சமயங்களில் வலி ஏற்படுவதும் மாரடைப்பும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றன. இதனால் உடனடி மரணம் சம்பவிக்கும் வாய்ப்புக் கூடுகிறது.

ஆனால் பெண்களுக்கு ஒரு குறைபாடும் உண்டு. ஆண்களின் இதயத்தைவிட பெண்களின் இதயம் சிறியது. எனவே இதய அறுவை சிகிச்சைகளில் மருத்துவர்கள மிகவும் சிரமப் பட, நேர்கிறது. அறுவை சிகிச்சையும் இறக்கும் வாய்ப்பும் ஆண்களைவிடப் பெண்களுக்கு மிகுதி. சிறு இதயம் காரணமாக, மாரடைப்பு ஏற்பட்ட 60 நாட்களுக்குள் ஆண்களைவிட பெண்கள் இருமடங்கு அதிகமாக இறக்கிறார்கள்.

வயதான பெண்கள் ஆண்களைவிட இதயத்தை எச்சரிக்கையாகப் பாதுகாக்க வேண்டும்.

—சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

மேடைப் பிழிவு:

# பம்மல்-ஈசுவரன் நகர் இலக்கியமன்ற பத்தாம் ஆண்டுவிழா

**தமிழன்பன்**

o தாய் தந்தையரையே உலகமெனச் சுற்றிய விநாயகனைவிட உண்மையிலேயே உலகத்தைச் சுற்றிய சுப்ரமணியன்தான் அறிவாளி. அவனுக்குத்தான் பழத்தைக் கொடுத்திருக்க வேண்டும். இந்தப் புராண இலச்சியம் அடிமைத்தனத்தைக் கற்பிக்கிறது. பெற்றோர்கள் சொல்வதைப் பிள்ளைகள் கேட்க வேண்டும், அரசியல் வாதிகள் சொல்வதை மக்கள் கேட்க வேண்டும் என்பது இயல்பான சிந்தனை ஆற்றலைக் கெடுப்பதாகும்.

o அறு ஏழு பெண்டாட்டிகளை வைத்திருந்த இராஜராஜ சோழனின் பரம்பரை நாங்கள் என்று சொல்லிக் கொள்வதிலே என்ன பெருமை. அவன் கட்டிய கோயிலை நிர்மாணித்த சிற்பிகள், ஏரி குளங்களை வெட்டிய தொழிலாளர்கள், இவர்களின் பரம்பரை என்று சொல்வதில்தான் பெருமை.

**பேராசிரியர் அ. ச. ஞானசம்மந்தன்**

o கிரேக்க நாகரிகத்தின் பிளாட்டோ அரிஸ்டாட்டில் போன்றவர்கள் தோற்றுவித்த பண்பாடுகள், நாகரிகங்கள் அவர்கள் காலத்திலேயே அழிந்துபோய்விட்டன. எகிப்திய நாகரிகமும் இவ்வாறே சிதைந்து போய் விட்டது. ஏறக்குறைய இதே காலத்தில் தோன்றிய தமிழ் நாகரிகம், சில மாறுதல்கள் ஏற்பட்டாலும் தனது தொன்மை நிலை மாறாமல் இலக்கியச் சிறப்போடு இன்றும் நிலைபெற்றுள்ளது. வள்ளுவப் பேராசனின் கருத்துக்கள் இன்றைய வாழ்விற்கும் பொருத்தமாக அமைந்துள்ளன.

**குமரி அனந்தன்**

o என்னை இலக்கியச் செல்வரென்று அழைப்பது நான் இலக்கியத்தில் செல்வராக இருப்பதால் இல்லையென்று நினைக்கிறேன். அடிக்கடி இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்வதால் இலக்கியச் செல்வன் என்கிறார்கள் போலும்.

—**பூங்கணியன்**

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பொங்கல் வாழ்த்துக்கள்

கடந்த நான்கு ஆண்டுகளாக ரஜினி படம் போட்ட பொங்கல் வாழ்த்துக்கள் விற்பனையில் முதலிடம் வகிக்கின்றன. இரண்டாவது மூன்றாவது இடங்களையும் நடிகர்களே ஆக்கிரமிக்கிறார்கள். எம். ஜி. ஆர்., கருணாநிதி, சிவாஜிகணேசன் படம் போட்ட வாழ்த்துக்களை வாங்குபவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அண்ணா, காந்தி படம் போட்ட அட்டையை இலவசமாய் தந்தால்கூட அஞ்சல் செலவுக்கு அஞ்சி வாங்க மறுக்கிறார்கள்.

படங்கள் இருக்கட்டும்; அட்டை வாசகங்களின் கதியோ அதிகேவலம். 'சகல கலா வல்லவன் கமலே! உன்னை நினைத்தாலே இனிக்கும்! வாழ்க பல்லாண்டு' என்ற வாசகம் பொறித்த அட்டை ஒருவனால் ரூ. 1-50 செலவு செய்து இன்னொருவனுக்கு அனுப்பப்படுகிறது. நடிகனை வாழ்த்தி நடிகனுக்கு அல்லவா அனுப்ப வேண்டும்.

உணர்வைத் தூண்டும் கவர்ச்சிப் படங்களும் விற்பனைக்கு வந்துவிட்டன. இதனை அனுப்புவதை இளைய தலைமுறை நவநாகரிகமாகக் கருதுகிறது. இவை மட்டுமல்ல; தமிழர் திருநாள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் வாழ்த்துக்கள் ஆங்கிலத்தில் அச்சிடப்படுகின்றன. 'தையும் பிறந்தது தானியம் குவிந்தது! நெய்யும் மணக்குது நெஞ்சம் இனிக்குது!' என தமிழில் வாழ்த்தினால் கேவலம். Best wishes for a Bright and Prosperous Happy Pongal என்று வாழ்த்தினால் நாகரிகம் இல்லையா?

தமிழ்நாட்டில் எது எதெற்கெல்லாம் அடிமைப்படுவது என்ற விவஸ்தை இல்லாமற் போய்விட்டது.

—அபிமன்யூ

---

ஃ சுட்டி வாசகர் இயக்க விண்ணப்பம் பெறாதவர்கள் எழுதுங்கள்.

## சுட்டி இலவசம்

சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

FREE E - BOOKS www.thamizham.net

சிறுகதை

# கிசு கிசு

''சங்கர், வரவர என்னைப் பத்தி எதுவுமே பத்திரிகைகள்ல எழுத மாட்டேன்கிறியே! முதன் முதல்ல என்னைப் பத்தி கவர் ஸ்டோரியெல்லாம் எழுதி பூஸ்ட் பண்ணின. இப்ப ஏன் கண்டுக்க மாட்டேன்கிற......?''

வித்யா வினவினாள். சங்கர் காபியை குடித்துமுடித்தான். அது டிசம்பர் இரவு. ஏ.சிக்கு அவசியமில்லை, எனினும் இயங்கிக் கொண்டிருந்தது. அவன் சற்றும் முற்றும் பார்த்தான். வித்யா என்கிற ராஜேஸ்வரி மூன்று வருடங்களுக்கு முன் ஓர் ஒண்டுக்குடித்தன அறையில் இருந்தவள். இப்போது மாளிகை வாசம்! இவை யாவும் சினிமாவால் மாத்திரம் சாத்தியம்...

''வித்யா, தமிழ்நாட்ல நூறு அழகான பெண் குழந்தைகள் பிறந்தா அதில ஒன்னு நடிகையாயிடுது. கூட்டம் அதிகமாயிடுச்சு. என்னைப் போன்ற சினிமா பத்திரிகைக்காரங்க மார்க்கெட் இருக்கிற பக்கம் தான் ஓடணும்.''

''சரி சங்கர், இப்போது எனக்காக ஏதாவது செய்யேன்.''

வித்யா சிரித்தாள். எத்தனையோ இயக்குனர்களையும், தயாரிப்பாளர்களையும் இடற வைத்தச் சிரிப்பு.

''ஒன்று செய்றேன். இன்னைக்கு முன்னணியில் உள்ள ஓர் இயக்குனரோடு உன்னை இணைத்தெழுதி விடுகிறேன்...''

x x x

''யார் டைரக்டர் மோகன்ராஜ்ஜா... நான் தான் எழுதச் சொன்னேன். மறுப்பா... ஓ... எழுதி அனுப்பிட்டேனே! ச்சே... சே... இதையெல்லாம் செய்யாமல் விடுவேனா? வாஹினி மூன்றாம் ஃப்ளோரா...? ஓ'கே!''

வித்யா வைத்தாள்.

x x x

---

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். சென்ற இதழில் என்னைப் பற்றி வந்த செய்தி அதிகப்பிரசங்கித்தனமான ஒன்று. உண்மைக்கு அப்பாற்பட்டது. தயவுசெய்து இனியாவது உங்கள் பேனாவில் மையைநிரப்புங்கள். பொய்யை நிரப்பாதீர்கள்!

—வித்யா

---

—ஸ. ஜெ. தூர்யா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ராஜீவுக்கு மட்டும்தான் விடுமுறையா?

பிரதமர் ராஜீவ் காந்தி மட்டும்தான் விடுமுறையை விதம் விதமாக அனுபவிக்கும் கேளிக்கைக் காரரா? அவரது அமைச்சரவை சகாக்களும் அவரை இந்த விஷயத்தில் அப்படியே பின்பற்றத் தொடங்கிவிட்டார்கள்.

பிரதமர் லட்சத்தீவின் பனாரம் தீவில் தரையிறங்கியவுடன் அரை டஜனுக்கு மேற்பட்ட மந்திரிப் பிரதானிகள் விடுமுறையைத் தாங்களும் அனுபவிக்கக் கிளம்பிவிட்டனர்.

கேரளாவின் கோவளக் கடற்கரைக்கு இரு மத்திய அமைச்சர்கள், ஜெகதீஷ் டைட்லர், யுதுர்டோ பலைரோ ஆகியோரும், பாதுகாப்பு சுற்றம் சூழ போய்ச் சேர்ந்தனர். ராஜீவுக்கு இருந்த பாதி பந்தாவாவது இவர்களுக்கும் இருந்திருக்கும்.

பிரதமரின் செயலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மட்டும் இளிச்சவாயர்களா? இந்த அதிகாரிகள்கூட, சில வியாபார நண்பர்களையும் (செலவு செய்ய) உடன் அழைத்துக் கொண்டு கோவா கடற்கரையில், ஆடம்பரமாக விடுமுறையைக் கழித்தனர்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பிரபல பொதுச் செயலாளர் ஒருவரும் இந்த சமயத்தில் ராஜீவ் வழியில் விடுமுறையைக் களித்தார். ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அமைதியான சரிஸ்கா தேசிய பூங்காவே அவருக்கு லட்சத் தீவுகள் போன்ற தனிமையையும் இனிமையையும் தந்தது. விடுமுறையிலிருந்து திரும்பியதும், அவர் இந்த விடுமுறை அனுபவத்தை இப்படி விவரிக்கிறார்: ''ஓர் அமைதியான விடுமுறை என்னைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு எவ்வளவு பயனாக இருக்க முடியும் என்பதை முதல் முறையாக உணர்ந்தேன். இனி நாங்களெல்லாம் ஆக்கப்பூர்வமாக, செயல்படுவோம்''.

—இசு.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பேய்க்கதை மன்னன்

## பி. டி. சாமி

முப்பது வருடங்களாக வாசகர்களை பய முறுத்த பல்வகை உத்திகளைக் கையாண்டு வருபவர் பி. டி. சாமி. இவர் மூன்றாம்தர வாசகர்களைத் திருப்திப்படுத்த எழுதும் நாலாம்தர எழுத்தாளர். டுமில் டுமில்' என்று க்ரைம் குழு அதிரடித்துக் கொண்டிருக்கிற இந்தநேரத்திலும், 'சதக் சதக்' என்று பூச்சாண்டி காட்டி பய முறுத்துகிறார்.

அரு. ராமநாதனின் பிரேமா பிரசுரம் சிந்தனையாளர் வரிசையையும், பொன்மொழி களையும் நியூஸ் பிரிண்டில் மலிவு விலைக்குப் போட்டுப் பெருமை தேடிக் கொண்டது. அதே வேளையில் பி. டி. சாமிக்கு ஆஸ்தான பதிப்பக மாக இருந்து சேற்றையும் பூசிக் கொண்டது.

இவர் பாக்கெட் நாவல்களுக்கு எடுபட வில்லை. பாக்கெட் நாவல் வெளியீட்டாளர்கள் இவரைப் புறக்கணித்தார்கள். ஆனால் கவலைப்படவில்லை. திரில் நாவல் என்று போட்டு இவரே நாவல் விற்பனையையும் ஆரம் பித்து விட்டார். அதோடு மற்றவர்களையும் தாக்கத் தொடங்கிவிட்டார்.

"அட்டை வனப்பாலும்... லேமினேஷன் பளபளப்பாலும்... தரமான புத்தக தயாரிப் பாலும்...பிரமிக்கவைக்கும் விளம்பரங்களாலும் ஒரு நாவல் விற்றுவிட்டால் அந்த எழுத்தாளர் காட்டும் மமதை மண்டைக் கர்வம். அடுத்த வர்களைக் கெடுக்கும் மனப்பாங்கு...!"
(கொலை வாழ்த்து பாக்கெட் நாவல் முன்னுரை)

ராஜேஷ் குமார், ராஜேந்திரகுமார், பட்டுக் கோட்டை பிரபாகர் போன்றோரை மேற்கண்ட வாறு தாக்குகிறார். பாம்பறியும் பாம்பின் கால்.

–துரியோதனன்

---

ஆசிரியர் : கு. நாராயண பாரதி, வெளியிடுபவர் : கி. இராமச் சந்திரன், அச்சிடுபவர் : எம். எஸ். ரவீந்திரன். ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-600 005. முகவரி 1494, அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இதுதான் நம்ம டி. வி.


- வந்தே மாதரம்!
- ராஜீவ்காந்தி மறுவாழ்வு இல்லக் கட்டடத்தைத் திறந்து வைத்துக் கூறியதாவது...
- யாழ்ப்பாணத்தில் எட்டு விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக யூ. என். ஐ. தெரிவித்தது.
- நாட்டில் அமைதி ஒழுங்கை பாதுகாக்கும் அவசியம் பற்றி தனது உரையில் ராஷ்ட்ரபதி கூறினார்.
- பஞ்சாபில் ஏழுபேர் அடையாளம் தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- இப்போது தேசிய ஒருமைப்பாடு பற்றி பாடல் ஒலிபரப்பாகும். இயற்றியவர் உளுந்தூர் பேட்டை ஷண்முகம். இசையமைப்பு டி. ஆர். பாப்பா.
- இந்திரா காங்கிரஸின் 18-வது வட்டக் கூட்டம் பழனியாண்டி தலைமையில் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடந்தது.
- தடங்கலுக்கு வருந்துகிறோம்.
- காபின்னா நரசுஸ் காபி .. பேஷ்! பேஷ்! ரொம்ப நல்லாயிருக்கே.
- வைஜெயந்திமாலா தலைமையில் காங்கிரஸைச் சேர்ந்த 213 பேர் ரத்ததானம் கொடுத்தனர். ஸ்டேட் பேங்க் உதவியுடன் இது நடந்தது.
- Over to Delhi
- க்யா ட்டு ஜ்யா ஹே!
- ஜெய்ஹிந்த்.


## வேல் டைப்பௌண்டரி

∴ புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
∴ எல்லா மொழி அச்செழுத்துக்கள்
∴ எல்லாவித அச்சக உபகரணங்கள்
∴ போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு,
பெருமாள் பேட்டை, சென்னை-7
தொ. பேசி. 27087


FREE E - BOOKS , www.thamizham.net.,



நாடகம்

# மீண்டும்

*இடம்:* எமலோகம்.

*பாத்திரங்கள்:* எமன், சித்ரகுப்தன்...மற்றும் கிங்காதரர்கள்.

*எமன்:* எதற்காக அவை அவசரமாகக் கூட்டப்பட்டிருக்கிறது?

*குப்தன்:* ஒருநபர் நமக்கு மிகவும் தொல்லை தருகிறார். அவரது ஆயுள் முடிந்த பின்னாலும் அவரை இங்கு அழைத்து வந்தது தவறென்று அனைவரும் கருதுகிறார்கள்.

*எமன்:* என்னென்ன செய்கிறான்...?

*குப்தன்:* அரசியல்வாதிகள் வழக்கமாகப் போகிற நரகத்துக்கு முதலில் அனுப்பினோம், அங்கு இருந்த பசி, பட்டினி கொடுமைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். அங்கு வேதனைக்கு ஆளானவர்களை வளைத்துப் போட்டு கட்சி ஆரம்பித்தார். அவரால் நரகத்தில் பிளவு ஏற்பட வாய்ப்பிருந்தது...

*எமன்:* நமது சட்டத்தில் என் அனுமதியின்றி சிறிய திருத்தம் செய்து சொர்க்கத்துக்கு அனுப்ப வேண்டியதுதானே...

*குப்தன்:* அனுப்பினேன்! அங்கு இருந்த அமைதியும், வளமையும் பிடிக்கவில்லையாம். எல்லாரும் எல்லாமும் பெற்று விட்டதால் யாரும் அவரை மதிக்கவில்லையாம். சுவாரஸ்யம் இல்லையாம். கட்சி ஆரம்பிக்கலாம் என்றால் வாக்குறுதி வழங்க வாய்ப்பில்லையாம்! ஒருதடவை இந்திரனை எதிர்த்து நின்று தோற்றார். ரம்பை, ரதி, திலேத்தமை போன்றவர்களைக் கிண்டல் செய்கிறார். அவர்களை வைத்து சினிமா எடுப்பேன் என்கிறார். என்ன செய்வது?

*எமன்:* (நீண்ட யோசனையின் பின்) இந்தியாவின் ஒரு மாநிலத்தில் ஒரு மந்திரியின் நாலாவது மனைவி முழுகாமல் இருப்பதாக செய்தி வந்துள்ளது. விஷ்ணுவிடம் கூறி மந்திரி மகனாக இவர் பிறக்க ஆவன செய்யுங்கள்!

*அனைவரும்:* எமதர்ம ராஜன்... வாழ்க! வாழ்க!

(அவை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது)

-பார்வையாளன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## திரை விமர்சனம்- AMIN
### RISE AND FALL

'உலகம் முழுவதையும் ஆளுவதற்குக் கடவுள் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்', 'உலகத்தின் மிகப்பெரிய ஆண்மையாளன் நான்' 'முகமதலி என்னோடு குத்துச் சண்டை போட முடியுமா?' — போன்ற அதிகபிரசங்கித் தனமான பேச்சுக்கெல்லாம் அதிபதி இடி அமீன். சமீப காலத்தில் தலைமறைவாக ஓடிச் சென்ற சர்வாதிகாரிகளுள் குறிப்பிடத்தக்கவர் அமீன். அவரைப் பற்றி ஓரளவு இந்தப்படம் சொல்கிறது.

ஒரு திரைப்படம் வெற்றியடைய வன்முறையும் (Violance), செக்ஸீம் துணைபுரிகிறது. இரண்டுமே இடி அமீன் வாழ்க்கையில் இருக்கிறது. எனவேதான் இந்தப் ப்டம் எடுக்கப்பட்டுள்ளது. தயாரிப்பாளரும், இயக்குநருமான பட்டேல் இப்படத்தின் மூலம் தனது மூலதனத்தைப் பன்மடங்கு பெருக்குவார் என்பது உண்மை. ஒளிப்பதிவாளர் ஹார்வி ஹார்ரிசன் நம்மூர் காமிராக்காரர்களுக்கு வகுப்பெடுக்கலாம். அமீனாக நடித்திருப்பவர் அற்புதமாக செய்திருக்கிறார்.

இயந்திர துப்பாக்கியால் படபடவென்று சுட்டுக் கொல்வது, சித்ரவதைகள், பிணங்களை குளிர்சாதன பெட்டியில் வைத்திருப்பது, குவியல் குவியலாக பிணங்கள் — போன்ற காட்சிகள் மனதைப் பிழிகின்றன. ஒவ்வொரு மனித இனத்தின், தேசத்தின் வரலாற்றில் இருக்கும் ரத்தக் கறையின் பங்கைச் சொல்கிறது !

அமீன் படுவேகமாக காரில் சென்று, ரிசர்வ் வங்கி கவர்னரிடம் பணம் அச்சிடச் சொலவதும், தனது ஐந்தாவது திருமண விழாவைப் பிரமாண்டமாகக் கொண்டாடுவதும் சிரிப்பை வரவழைக்கிறது. தனது ஆறு வயது மகனுக்குப் பதக்கம் அணிவித்து வாரிசாக உருவாக்குவதும் நகைப்பிற்குரியது.

தியேட்டரில் ரசிகர்கள் செக்ஸ் காட்சிகள் அரை மணிக்கு ஒரு முறை இல்லையென்றால் விசிலடிக்கிறார்கள். கைத் தட்டுகிறார்கள் அசிங்கமாக சத்தம் போடுகிறார்கள். இது திரைப்படம் பார்க்கிற மற்றவர்களை அருவருப்படையச் செய்கிறது.

அதிகாரங்களையும், ஆயுதங்களையும் ஒருவன் குவித்துக்கொண்டால் எப்படி ஆவான் என்பதற்கு அமீன் எடுத்துக் காட்டு.

—உலக பிரஜை

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பதில்கள்

*? அதிகமாக பாராட்டுவீர்களா?*

! அறிஞர் வ. ரா: ஆமாம். நான் பலரையும் தாராளமாகப் பாராட்டுகிறேன் என்று சிலர் குறை கூறுகிறார்கள். நம்மவர்களுக்குப் பாராட்டுவதற்கே மனம் வருவதில்லை. பாராட்ட வேண்டியதை வெளிப்படையாகப் பாராட்டாமல் இருப்பது தப்பு. அதனால் வளர வேண்டியவர்கள் வளராமல் இருந்து விடுகிறார்கள். நான் தாராளமாகப் பாராட்டுவேன். அதனால் உற்சாகம் அடைந்து, நிமிர்ந்து நின்று முன்னே நடப்பதற்கு ஊக்கம்பெறுகிறவன் பெறட்டுமே. தெம்பு இல்லாதவன் கீழே விழுந்துவிட்டுப் போகிறான்!

*? சட்டம் எல்லோரையும் நல்லவர்களாக்கி விடுமா?*

! அரிஸ்டாட்டில்: சட்டம் என்பது ஓர் ஒப்பந்தம். பிரஜைகள், ஒருவருக்கொருவர் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதாகக் கூறும் உறுதிமொழி. இருப்பினும் சட்டம் எல்லா மக்களையும் நல்லவர்களாக நீதியுள்ளவர்களாக ஆக்க முடியவில்லை. சட்டங்கள் சரியான முறையில் வைக்கப்படாத நாடு சுதந்திர நாடல்ல.

*? பண்பாடு பற்றி கூறுங்கள் எமர்சன் அவர்களே*

! அளவோடு இருத்தல்தான் பண்பாட்டின் அரும்பெரும் எல்லையாகும். பண்பாடு என்பது வேறு. பளபளக்கும் மேல்மினுக்கு வேறு. தூய்மையான ஒழுக்கமின்றி உயர்ந்த பண்பாடு இருக்க முடியாது.

*? மக்களுக்கு நீங்கள் விளம்பரமாக விரும்புகிறீர்களா?*

! கவிஞர் இன்குலாப்: நான் மக்களுக்கு அறிமுகமாக விரும்புகிறேன். விளம்பரமாக அல்ல. மக்களும் நானும் பரிமாறிக் கொள்வதற்குளத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. அவை அறிமுகத்தால் வாய்க்கும். விளம்பரத்தால் வாய்க்காது. என் ஆயுள் முழுக்க மக்களுடன் அறிமுகமாவதையே விரும்புகிறேன். ஏனெனில் நான் மனிதன். சரக்கல்ல.

FREE E - BOOKS www.thamizham.net

# நரகமாகும் நகரங்கள்

இந்தியாவின் 3245 நகரங்களும், பேரூர்களும் புற்றுநோயாக வளர்ந்து அழிவை விரைகின்றன. கிராமங்களில் ஆரோக்கியமாகவாழ்ந்த இந்தியா, நரகமாகும் நகரத்தை நோக்கி நலிந்து கொண்டிருக்கிறது. 1991இல் 10 லட்சம் மக்களுக்கு மேல் வாழும் நகரங்களின் எண்ணிக்கை 12 லிருந்து 20 ஆகும்.

கல்கத்தாவும் பம்பாயும் ஏற்கனவே 1 கோடி மக்கட் தொகையைக் கடந்து நிற்கின்றன. ஆண்டுதோறும் 50 லட்சம் மக்கள் இப்படி நகரத்தை நோக்கி வருவதால் 1951 இல் 5.6 கோடியாக இருந்ந தகர மக்கட்தொகை இன்று 23 கோடியாகி விட்டது.

கிராமங்களை, சிற்றூர்களையும் சரியாக வளர்க்கத் தவறிவிட்டமையால் நாட்டின் மக்கட் தொகை பெருக்கத்தைவிட இருமடங்கு நகர மக்கட் பெருக்கம் அமைந்துவிட்டது. கல்கத்தாவில் மட்டும் தினம் 2000பேர் குடியேறுகிறார்கள். நகரங்களின் மூன்றில் ஒருபகுதி மக்கள் மோசமான குடிசைகளிலோ, பிளாட்பாரங்களிலோ வாழ்கிறார்கள். (சென்னையில் 32.1% மக்கள் சேரிகளில் உள்ளனர்) எஞ்சியவர்களில் பாதிபேர் ஓர் அறைமட்டுமுள்ள ஒண்டுக்குடுத்தன வீடுகளில் திணிக்கப்பட்டு சகல வசதிக் குறைவுகளுடன் நசிகிறார்கள். 16,502 கட்டிடங்கள் எந்த நேரமும் இடிந்து விழும் நிலையில் உள்ளன.

வாகனங்களின் நெரிசலால், காற்று மண்டலம் நகரங்களில் சில பகுதிகளில் தாங்கும் சக்திக்கு மேல் 3 மடங்கு மாசு படிந்துள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் காது இரைச்சலை தாங்கும் சக்தி 55டெசிபெல்கள் என்கிறது. நகரங்களில் டநெரிசலான இடங்களில் 57 முதல் 91 டெசி பெல்கள் ஒலி காதைக் கிழிக்கிறது. நகரச் சீரழிவைக் காட்டும் பட்டியல் (மொத்த மக்கட் தொகையில் தட்டுப்பாடு உள்ள வீடுகள்.)

| | மின்சாரம் இல்லை | குழாய்நீர் இல்லை | கழிவறை இல்லை |
|---|---|---|---|
| கல்கத்தா | 37.1% | 66.9% | 50.0% |
| பம்பாய் | 22.4% | 41.7% | 26.6% |
| டில்லி | 24.9% | 48.6% | 31.8% |
| சென்னை | 34.6% | 68.6% | 31.3% |

-ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

பிறநாடுகள்

# மங்கோலியா




ஜப்பானைப் போல 4 மடங்கும், இந்தியாவில் பாதி அளவும் உள்ள மங்கோலியாவிற்கு 39%. ரஷ்யாவும், 61% சீனாவும் எல்லைகள். இப்பெரிய தேசத்தின் மக்கட்தொகை 13 லட்சமே. கால் நடைகள் 2 1/2 கோடி. கடலே இல்லா இந்த நாட்டில் 1200 நதிகள் பாய்கின்றன. 1/3 பகுதி கோபி குளிர் பாலைவனம். இங்கு மண்ணுக்கடியில் ஓடிடும் நீரோட்டத்தை சத்தமில்லாதபோது கேட்கலாம்: கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 5200 ச. அடி உயர தேசமிது. எண்ணற்ற இயற்கை வளம். குளிர்காலத்தில் நீலவானம் எப்போதும் தெரியும் அழகு தேசம். தலைநகர்: உலான் பாதர் தேசிய மொழி: கால்கா வெப்பநிலை: 25° செ முதல் - 45° செ

உலகத்தின் மூலினங்களில் ஒன்றான மங்கோலிய இனம் இவர்கள் பெயராலேதான் அழைக்கப்படுகிறது. துருக்கி முதல் சீனம் வரை ஆண்ட செங்கிஸ்கான் (பாபரின் மூதாதை) தோன்றிய பூமியது. கி. மு. 200 அளவில் இங்கு புத்த மதம் நுழைந்தது. 1911 இல் 50% ஆண்கள் புத்தத் துறவிகள். 1917 ரஷ்யப் புரட்சியின் எதிரொலி, மங்கோலியாவில் டாம்டின் அக்பாடர் தலைமையில் 1921 இல் ஆசியாவின் முதல் கம்யூனிச அரசை உருவாக்கியது.

இந்நூற்றாண்டில் தொடக்கத்தில், ஆசியாவிலேயே பின் தங்கிய நாடிது. எழுத்தறிவுடையோர் 2%; கால் நடைகளை மேய்த்துத்திரியும் நாடோடி வாழ்க்கை. 80% கால் நடைகளும் 1 லட்சம் புத்தத் துறவிகளுக்கும், நிலச்சுவான்களுக்கும் சொந்தம். தொழிற்சாலைகளோ, நவீன அறிவியல் வாடையோ எங்குமில்லை. 1971 இல் 50வது சோஷலிச நிறைவாண்டை மங்கோலிய மக்கள் குடியரசு கொண்டாடியபோது நிலைமை தலைகீழ். 100% மக்கள் எழுத்தறிவுடையோர். இன்று: அனைவர்க்கும் வேலைவாய்ப்பு, இலவச கல்வி, மருத்துவ வசதி, நவீன வீட்டு வசதி, இலவச சுற்றுலா வசதி, மலிவான போக்குவரத்து. 8 பேருக்கு ஒரு வானொலி, 40 பேருக்கு ஒரு தொலைக்காட்சி. உயர் கல்வியில் 12 பேருக்கு ஒரு ஆசிரியர்.

**உலகில் நிலவுடமைச் சமூகத்திலிருந்து, முதலாளித்துவத்திற்குச் செல்லாமல் நேரடியாக சோஷலிசத்திற்குத் தாவிய ஒரே அதிசய தேசம் மங்கோலியா.**

வெளியுலகில் விளம்பரம் அதிகமாகாமல், அமைதியாக சுதந்திரத்தைப் பேணி வாழும் தேசமிது. இந்தியாவை இவர்கள் மிகவும் நேசிக்கிறார்கள். இந்திய கலாச்சாரத்திற்கு கடமைப்பட்டவர்களாக நினைக்கிறார்கள். நம் திரைப்படங்களும், ஆயுர்வேத மருத்துவமும், யோசனமும், மூக்குப் பொடியும் இவர்களைக் கவர்ந்துள்ளன.

இந்தியாவிலிருந்து மங்கோலியாவிற்குச் செல்ல வழியில்லை. மாஸ்கோ சென்று அங்கிருந்து பறக்கலாம்.

-உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பெற்றோர்க்கு வீட்டுப் பாடங்கள்



பள்ளி முடிந்து வீட்டுக்கு வரும் குழந்தைகள், வீட்டையும் பாடசாலையாக மாற்றி விடுகின்றன. வீட்டில் கிடைக்கும் மாறுதலான சூழலிலும் மனம் மகிழும் விளையாட்டுகளிலும் குழந்தை அறிவு பெற வேண்டும் புலன்கள் அனைத்திற்கும் இயல்பான முறையில் பயிற்சி தர வேண்டும். மனம் தானே அறிவைத் தேடிச் செல்ல வேண்டும். இதுவே முறையான குழந்தைப்பருவ வளர்ச்சி.

ஆனால் இங்கு நடப்பதென்ன? வீட்டுக்கு வந்து விளையாட முடியாத அளவு தலை வெடிக்கும் வீட்டுப் பாடங்கள்–இரவு படுக்கப் போகும் வரை செய்தும் முடியாது, சில நேரங்களிலும் விடியலில் எழுந்து செய்தும் முழுவதுமாக முடிக்க முடியா வீட்டுப் பாடங்கள். செய்து முடிக்கா விட்டால் அச்சுறுத்தும் தண்டனைகளுக்குப் பயந்து பிள்ளைகள் படும் வேதனைகள்.

பிள்ளைகள் செய்ய முடியாமல் திணறும் போது, கூட இருந்து பெற்றோரும் துணை செய்ய வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட தினமும் பெற்றோரும் இந்த வீட்டுப்பாடங்களில் பங்கேற்க வேண்டியிருப்பதால் குழந்தைகளுடன் விளையாடவோ, அவர்களின் உணர்வுகளுக்கு ஊட்டம் தரவோ முடிவதில்லை. பிற வேலைகளையும் அவர்கள் செய்ய முடியாமல் ஓய்விழக்கிறார்கள். இன்று என்ன வீட்டுப் பாடத்துடன் பையன் வருவானோ என்ற திகைப்பு மாலை வந்தால் எழுகிறது. இதற்காகத் தனிச் சம்பளம் கொடுத்து தனிப்பயிற்சி ஆசிரியர் வைக்கும் நிலையும் ஏற்படுகிறது. ஆனால் பள்ளிக் கூடத்திற்குச் செலுத்தும் கடும் கட்டணங்களுக்கு மேலும் எத்தனை பேரால் தனிச் செலவு செய்ய முடியும்?

சென்னையில் சில பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போதே பெற்றோருக்கு நேர்முகத் தேர்வு வைக்கிறார்கள். அதில் பிள்ளைகளுக்கு வீட்டில் சொல்லிக் கொடுக்க இந்தப் பெற்றோருக்கு முடியுமா என்பதையும் சோதிக்கிறார்களாம்!

–இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

## விலை குறிப்பிடுவதில் மோசடி

இப்போதெல்லாம் எந்தப் பொருளை வாங்கினாலும் அதன் விலையை மேலே அச்சிடுகிறார்கள். இது அரசாங்க விதிகளுக்காக வற்புறுத்தப்பட்டு போடப்படுவதாகும். இதில் அதிகப்பட்ச விலை (Max price) என்றும் அதன் கீழ் உள்ளூர் வரிகள் தனி என்ற குறிப்பும் காணப்படும்.

போட்டிருக்கும் விலைக்கு மேல், கடைக்காரர் அதிக விலை கேட்கிறார். கேட்டால், உள்ளூர் வரி சேர்ந்து (அதற்கு மேல் எத்தனை சதவீதம் வரி என்ற விளக்கம் நமக்கு சொல்லப்படுவதில்லை) இவ்வளவு ஆகிறது என்பார். இந்த வரி அரசாங்கத்திற்கு உண்மையாக போய் சேருகிறதா அல்லது கடைக்காரரே அமுக்கிறாரா என்று கண்டுபிடிக்க வழியில்லை.

இது ஒரு புறம் இருக்க சில நிறுவனங்கள் ஒரு வியாபார தந்திரமாக தங்கள் விற்பனையைப் பெருக்கும் நோக்குடன், உண்மையாக விற்க வேண்டிய விலைக்கு மேல் 10-15% அதிகமாகவே விலை விவரம் அச்சிட்டு கடைக்காரர் கொஞ்சம் அதிகமாகவே கமிஷன் பெற உதவி செய்கின்றன. எடுத்துக்காட்டாக கேஸ் ஸ்டவ் லைட்டர் ஒன்று வாங்கப் போனபோது ரூ.40 என்று அச்சிட்டிருந்தற்கு கடைக்காரர் வரியுடன் ரூ42/- பெற்றார். இதே லைட்டர் பின்பு தாம்பரத்தில் ஒருகடையில் ரூ. 30க்கு இருவருட உத்திரவாதத்துடன் காணப்பட்டது. விவரம் தெரிந்தவர்களுக்குக் கடைக்காரர் விலை குறைத்துத் தருவதும், அப்பாவியாக வருவோரிடம், அச்சிட்டு விலையைப் பெறுவதும் வாடிக்கையாக நடந்து வருகிறது. வியாபாரத்தைப் பெருக்க விரும்பும் சில கடைக்காரர்கள் யாராக இருந்தாலும், அச்சிட்ட விலையை விடக் குறைவாக விற்பனை செய்து கஸ்டமர்களைப் போலியாக குளிர்விப்பதுமுண்டு.

உண்மையான பாட்டில்களில் போலி செண்டுகளை விற்பனை செய்வது பர்மா பஜார்களில் நாமறிந்த பச்சையான மோசடி வேலை. இப்போது பிரபல தயாரிப்பு நிறுவனங்களே விலையை உயர்த்தி அச்சிட்டு நம்மைச் சுரண்ட வழி வகுப்பது பர்மா பஜார் மோசடியை விட நயவஞ்சகமானதாகும்.

—நந்தி பா. சம்பத்குமார்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பத்திரிகை ஆணா? பெண்ணா?

நாம் கேட்கவில்லை பாரதியார் கேட்கிறார். "பத்திரிகைகளில் பால் வேற்றுமை" என்று பாரதியார் எழுதியது—

"இப்போது சில காலமாகப் பத்திரிகைகளில் பெயர்களுக்குச் சிலர் ஆண்பால், பெண்பால் வகுக்கத் தொடங்கியிருப்பது மிகவும் விசேசமாகத் தோன்றுவதால், இங்கு அதைக் குறித்து எழுத நேர்ந்தது. முதலாவது இவ்வழக்கம் "தேச பக்தன்" பத்திரிகையில் தொடக்கமெய்திற்றென்று நினைக்கிறோம். அப்பத்திரிகையில் பழைய பத்திராதிபராகிய சிறீமான் கல்யாண சுந்தர முதலியாருடைய காலந்தொட்டே "சுதேசமித்திரன் சொல்லுகிறான்" "தேச பக்தன் சொல்லுகிறான் என்பன போன்ற பிரயோகங்கள் வழங்கி வருகின்றன. இப்போது சிறீமான் முதலியார் நடத்தி வரும் "நவசக்தி" பத்திரிகையிலும் அவ்வழக்கம் இருந்து வருகிறது"

பாரதியார் இப்படிச் சொல்ல, அவருடைய தாசனோ "பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே" என்று இதழைப் பெண்ணாக வர்ணிக்கிறார்.

1945 செப்டம்பர் "சக்தி" இதழில் "பெண்ணும் பத்திரிகையும்" என்ற தலைப்புடன் வந்த ஒரு துணுக்கு.

"பெண்ணும் பத்திரிகையும் ஒன்றே. எப்படி? எப்படியென்றால் இரண்டுக்கும் ரூபம் உண்டு. அவற்றின் வார்த்தைக்கு அப்பீல் கிடையாது. இரண்டும் பார்க்கத் தகுந்தவை. இரண்டுக்கும் செல்வாக்கு உண்டு. அவை சொல்வதையெல்லாம் நம்ப முடியாது. முன்னை விட அவை மெலிந்து விட்டன. ஒவ்வொரு மனிதனுக்கும் என்று தனியாக இருக்க வேண்டும். பிறரிடம் இரவல் வாங்கக்கூடாது.

இதழைப் பெண் என்று சொல்வதே சரி. பெண்களே நடமாடும் இதழ்கள் தானே.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அந்நிய மண்ணில்

# இந்தியரும், சீனரும்

உலக உருண்டையில் இந்தியர்கள் 'குடியேறாத பகுதிகள் குறைவு. ஏதாவது ஒரு காரணத்தால் அவர்கள் வெளியேற்றப்பட்டால்; இந்தியா அவர்களை மீண்டும் மகிழ்ச்சியுடன் ஏற்கிறதா? இங்கு "அகதி" என்ற பெயரில் திரும்பியுள்ள அயல் நாட்டு இந்தியர்களைக் கேட்டால், அவர்கள் கண்ணீர் கதைகளைத் தானே சொல்கிறார்கள்.

நம்மைப்போலச் சீனர்களும் எல்லா தேசங்களிலும் குடியேறியுள்ளனர். 2½ கோடி சீனர்கள் அயல் தேசங்களில் வாழ்கிறார்கள். இது அயல் நாட்டு இந்தியர்களைப் போல் இரு மடங்-காகும். தாய்வான், ஹாங்காங், மக்காவோ, சிங்கப்பூர் ஆகிய 4 நாடுகளில் இவர்களின் எண்ணிக்கையே மிகுதி. 'தென்கிழக்கு ஆசியாவின் 60% வணிகம் இவர்கள் கைகளில் இருக்கிறது. இவர்களில் பலரும் 19-ஆம் நூற்றாண்டு முதல் கூலிகளாக வேலை செய்ய அழைத்துச் செல்லப்பட்டவர்கள்தாம்.

1909 லேயே 'சீனா ஒரு முறை சீனன் என்றும் சீனனே" என்று அறிவித்தது. 1954இல் மா-சே-துங் ஆட்சியில் "அயல் நாடுகளின் வாழும் அனைத்துச் சீனர்களின் உரிமைகளையும், நலன்களையும் மக்கள் சீனம் பாதுகாக்கும்" என்ற சிலவரிகள் சீன அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டன. சீன மண்ணை விட்டு எவ்வளவு ஆண்டுகளுக்கு முன் பிரிந்திருந்தாலும், சீன பாஸ்போர்ட் இல்லாவிட்டாலும், சீனப் பெயரே வைக்காதிருந்தாலும் உலகின் எப்பகுதியில் வாழ்ந்திருந்தாலும் சீனக் குடியுரிமைக் குரியவர்களாக இவர்கள் கருதப்படுவார்கள், கலப்புத் திருமணம் புரிந்து சீனத் தந்தை வழி பிறந்தவர்கள் கூட, தந்தை வழி உறவினால் சீனக் குடிமக்களாக முடியும்.

1959-இல் 1 லட்சம் சீனர்களை இந்தோனேசியாவிலிருந்தும், 1979-இல் 2.6 லட்சம் சீனர்களை வியட்நாமிலிருந்தும், சீனர்களுக்கு இந்நாடுகளில் தொல்லை நேர்ந்த போது சீனா அரவணைத்து ஏற்றுக்கொண்டது. 1962 சீன-இந்திய போர்க்காலத்தில் சீனக்கப்பல் ஒன்று, இந்தியாவில் இருக்க விரும்பா சீனர்களை மீட்டுக் கொள்ள அனுப்பப்பட்டது.

சீனர்கள் எங்கிருந்தாலும் அனாதைகளாகி விட தாய்ச் சீனா அனுமதிப்பதில்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

—உலகப்பன்

# பாரதியாரிடம் முரண்பாடு ஏன்?

"மகாகாளி பராசக்தி உருஸ்யநாட்டில் கடைக்கண் வைத்தாள் அங்கே ஆகாவென்று எழுந்தது பார் யுகப்புரட்சி" என்று பாரதியார் பாடியதை, பொதுவுடைமை வாதிகள் பலர் ஓகோ என்று புகழ்கிறார்கள்.

அதே பாரதியார் இன்னொரு இடத்தில் இத்தகைய புரட்சி இந்தியாவில் வெடிக்காது என்று குறிப்பிடுகிறார் : (28-11-1917 "செல்வம்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை)

*"முதலாவது காரணம் இந்து ஜன சமூக அமைப்பில், ஐரோப்பாவில் இருப்பது போல அத்தனை அதிகமான தாரதம்மியம் இல்லை. முதலாளித் தொழிலாளி, செல்வன், ஏழை இவர்களிடையே ஐரோப்பாவில் உள்ள பிரிவும் விரோதமும் நம் தேசத்தில் இல்லை. ஏழைகளை அங்குள்ள செல்வர் அவமதிப்பது போலவே நமது நாட்டுச் செல்வர் அவமதிப்பது கிடையாது. ஏழைகளுக்குத் தானம் கொடுப்பது என்ற வழக்கம் நம் தேசத்தில் இருக்கும் அளவுக்கு அந்தக் கண்டத்தில் கிடையாது. கொலையாலும், கொள்ளையாலும், அன்பையும், சமத்துவத்தையும் ஸ்தாபிக்கப் போகிறோம் என்று சொல்வோர் தம்மைத் தாம் உணராத பரம மூடர்கள் என்றே நான் கருதுகிறேன். 'இதற்கு நாம் என்ன செய்வோம்? கொலையாளிகளை அழிக்க, கொலையைத் தானே கையாள நேருகிறது. அநியாயம் செய்வோரை அநியாயத்தால் தானே அடக்க நேரிடுகிறது' என்று ஸ்ரீமான் லெனின் சொல்கிறார் இது முற்றிலும் தவறான கொள்கை... ... லெனின் வழி சரியான வழி இல்லை...*

புரட்சி வெடித்து ஜார் மன்னன் வீழ்ந்ததற்கு மகா காளியே காரணம் என்று சொல்லும் பாரதி அந்தப் புரட்சிக்குத் தந்தையான மாவீரன் லெனினை பரம மூடன் என்கிறாரே! தானம் கொடுப்பதன் மூலம் ஏழ்மையை ஒழித்து விட முடியும் என்கிறாரே! மகாகவி பாரதியின் பல்வேறு முற்போக்கு சிந்தனைகளைக் கண்டு நாம் தலை வணங்கும் அதே நேரத்தில் அவர் இப்படி சில இடங்களில் வழுக்கி விழுந்திருப்பது கண்டு வேதனைப் பட வேண்டியுள்ளது.

—அஞ்ஞானி

FREE E - BOOKS , www.thamizham.net.,

Regd. No. TN/MS(N)/317

# வாசகர் எதிரொலி

°°° "ஆபாசத்திற்கு அழைப்பிதழ்" படித்தேன். அதிர்ந்தேன்... தாய்க்குலம் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டிய விஷயம். எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் அது செய்யும் தவறுகளைத் துணிச்சலாக சுட்டிக் காட்டுவதில் சுட்டி முன்னணியில் உள்ளது. பாராட்டுகள்.

—ல. சண்முகம், திருவண்ணாமலை

°°° பார்வையாளன் எழுதிய "ராஜேஷ்குமார்" பற்றிய தொகுப்பு அருமை. இலக்கிய உலகில், நாவல் உலகில் படிப்படியாக முன்னேறி வந்ததை - வருவதைக் கட்டுரையாளர் பாராட்டாமல் குறைகளை மட்டும் சுட்டிக் காட்டி இருந்தது பொறுப்பின்மையைத்தான் காட்டுகிறது.

—வ. உ. சி. பாலகிருஷ்ணன், திருப்பரங்குன்றம்

°°° "புதிய நாள்காட்டி" எவ்வளவோ சிக்கனமான செலவில் அமைந்துள்ளது. உடனே மனதில் பதியக் கூடிய எளிய நடைமுறையில் உள்ளது. ஆனால் அது எப்போது நடைமுறைக்கு வரும் என்பதை நினைக்கும்போதுதான் மிகவும் கஷ்டமாக உள்ளது.

—என். அன்பழகன், திருவல்லிக்கேணி

°°° ஒரு வித்தியாசமான முயற்சி என்ற அளவில் 'பேசும் படம்' திரைப்படத்தின் நெருடல்களை மன்னித்துவிடலாம். விமர்சனமே எழுதாத உங்களையும் திரைப்பட விமர்சனம் எழுத வைத்த அளவில் 'பேசும் படம்' வெற்றிப்படமே.

—எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

## சுட்டி

தொடர்பு முகவரி:
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை-600 040

சுட்டி ஆண்டுச் சந்தா : ரூ. 10
ஆயுள் சந்தா : ரூ. 150

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்களஞ்சியம்

FREE E - BOOKS , www.thamizham.net.,